**செ. கு. எண்: 026** **நாள்: 20.02.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்

''உலகத் தாய்மொழி நாள்'' வாழ்த்துச் செய்தி

மக்கள் தங்கள் தாய்மொழிகளைப் போற்றி பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு கொண்டுசெல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கில், யுனெஸ்கோ நிறுவனம் ஆண்டுதோறும் பிப்ரவரி திங்கள் 21–ஆம் நாளை உலகத் தாய்மொழி நாளாக அறிவித்துள்ளது.

திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகவும், சீரிளமை குன்றாத மொழியாகவும், வளமையும் தூய்மையும் மிக்க மொழியாகவும், மொழிக்கு மட்டுமல்லாமல் வாழும் நெறிக்கும் இலக்கணம் வகுத்த மொழியாகவும், உலக மொழிகள் அனைத்திலும் தொன்மை மிக்க மொழியாகவும் விளங்குகின்ற நம் தாய்மொழியாம் தமிழ் மொழியை இந்த இனிய நாளில் போற்றிட நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழுக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் வளம் சேர்க்கும் வகையில் தொண்டாற்றி வரும் தமிழறிஞர்களை போற்றிச் சிறப்பிக்கும் வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழறிஞர்கள், புலவர்களின் பெயர்களில் பல்வேறு விருதுகளைத் தோற்றுவித்து ஆண்டுதோறும் தமிழறிஞர்களுக்கு வழங்கிச் சிறப்பித்து வருகிறது. அவ்வகையில் தமிழ் அமைப்புகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் தமிழ்த்தாய் விருது, தமிழறிஞர்களுக்கு கபிலர், கம்பர், உ.வே.சா, சொல்லின் செல்வர், ஜி.யு.போப், உமறுப்புலவர், இளங்கோவடிகள், சிங்காரவேலர் ஆகியோரின் பெயர்களில் விருதுகள், கணினி யுகத்திற்கேற்ப தமிழ் மென்பொருள்களை உருவாக்குபவருக்கு முதலமைச்சர் கணினித் தமிழ் விருது, பெண் எழுத்தாளர்களை பெருமைப்படுத்திட அம்மா இலக்கிய விருது, தமிழ் இலக்கியங்களை பிற மொழிக்கும் பிற மொழிப் படைப்புகளைத் தமிழிலும் மொழிபெயர்ப்பவர்களுக்கு 'சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது, அயல்நாடுகளில் இலக்கணம், இலக்கியம், மொழியியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் தமிழறிஞர்களுக்கு விருதுகள், தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தமிழ் தொண்டாற்றி வரும் தமிழ் ஆர்வலர்களுக்கு 'தமிழ்ச்செம்மல் விருது' போன்ற விருதுகளை வழங்கிச் சிறப்பித்து வருகிறது. மேலும், இந்த ஆண்டு முதல், அயோத்திதாசப் பண்டிதர், மறைமலையடிகள் ஆகியோரின் பெயர்களில் புதிய விருதுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அத்துடன், சங்ககாலப் புலவர்களை நினைவு கூரும்விதமாக, தமிழ் கவிஞர் நாளாக கொண்டாடப்படும் ஏப்ரல் 29–ஆம் நாளன்று அப்புலவர்களின் நினைவுத் தூண்களுக்கு மாலை அணிவித்து மலர் தூவிச் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

மேலும், மாநிலங்கள் மொழிவாரியாக பிரிக்கப்பட்டபொழுது, தமிழ்நாட்டின் எல்லையைக் காக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட எல்லைக் காவலர்களுக்கு மாதந்தோறும் ரூ.4500/– உதவித் தொகை மற்றும் மருத்துவப்படி ரூ.500/–ம், எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கு மாதந்தோறும் ரூ.2500/– உதவித் தொகை மற்றும் மருத்துவப்படி ரூ.500/– வழங்குதல், தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3500/– உதவித் தொகை மற்றும் மருத்துவப்படி ரூ.500/–ம், தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு மாதந்தோறும் ரூ.2000/– உதவித் தொகை மற்றும் மருத்துவப்படி ரூ.500/– வழங்குதல், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கும், அவர்களின் மரபுரிமையர்களுக்கும் மாதந்தோறும் ரூ.2500/– உதவித் தொகை மற்றும் மருத்துவப்படி ரூ.500/– வழங்குதல், 1330 குறட்பாக்களையும் ஒப்புவிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.10,000/– பரிசுத் தொகை வழங்குதல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுகலைத் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.2000/– உதவித்தொகை வழங்குதல் என பல்வேறு வகையில் தமிழ் மொழிக்காக பாடுபட்டவர்களுக்கும், பாடுபடுபவர்களுக்கும் பயன்படும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

உலகத் தாய்மொழி நாளான இந்த இனிய நாளில், நம் தாய்மொழியாம் தமிழ் மொழியை போற்றி பாதுகாத்து, வளர்த்திட நாம் அனைவரும் பாடுபட வேண்டுமென்று உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**